Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No. CC. No. 14 /2018

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No. 2**

| | | | |
|---|---|---|---|
| Name : | GOPI | Calling: | PC |
| Father's Name: | MANOHARAN | Religion: | HINDU |
| Village: | VANIYAMBADI | Age: | 30 |
| Taluk: | VANIYAMBADI | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Indian Evidence Act 1872 Dated : 04.09.18

காவல் அடையாளம் காட்டியதன் பேரில் சாட்சி விசாரிக்கபபடுகிறார்.

CC 14 / 2018 அ.சா.2 கோபி த/பெ.மனோகரன் வயது 30

**முதல் விசாரணை :**

நாள் : 04.09.18
நேரம் : 12.44 P.M.

நான் தறபோது திருச்சியில் சிலை கடத்தல் தடுப்பு பிரிவில் காவலராக வேலை செய்கிறேன். 2017ம் வருடம் நானும் HC முருகன் 1262 என்பவரும் ரோந்து உதயேந்திரம் வழியாக சென்றோம். அங்கே டிராக்டர் ஒன்று வந்தது. எங்களை கண்டதும் அந்த டிராக்டரின் ஓட்டுநர் தப்பி ஓட பார்த்தார். அவரை அழைத்து விசாரித்ததில் பெயர் தனபால் என்று கூறினார். மேற்படி டிராக்டரில் மணல் இருந்தது. அதை கைப்பற்றி நிலையம் எடுத்து வந்து சாட்சி 3 ஆன ராஜமாணிக்கத்திடம் ஒப்படைத்தோம். சேர்த்தோம். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ2.

**குறுக்கு விசாரணை :**

எதிர் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை. 12.48 P.M.

Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No. CC. No. 14 /2018

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No. 3**

| | | | |
|---|---|---|---|
| Name : | RAJAMANIKKAM | Calling: | SSI |
| Father's Name: | MUNIRATHINAM | Religion: | HINDU |
| Village: | VANIYAMBADI | Age: | 56 |
| Taluk: | VANIYAMBADI | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Indian Evidence Act 1872 Dated : 04.09.18

காவல் அடையாளம் காட்டியதன் பேரில் சாட்சி விசாரிக்கபபடுகிறார்.

CC 14 / 2018 அ.சா.3 ராஜமாணிக்கம் த/பெ.முனிரத்தினம் , வயது 56

<u>முதல் விசாரணை :</u> நாள் : 04.09.18

நேரம் : 12.07 P.M.

நான் தற்போது வாணியம்பாடி கிராமிய காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிகிறேன். கடந்த 25.07.2017ம் தேதி மதியம் 2 மணிக்கு மணல் திருட்டு வழக்கு சம்மந்தமாக வாணியம்பாடி உதயேந்திரம் பாலாற்றங்கரை ஓரம் உள்ள ரோடு பகுதியில் நானும், தலைமை காவலர் 1262 முருகன் மற்றும் 3439 கோபி ஆகியோர் சகிதமாக கண்காணித்து கொண்டு சென்ற போது அந்த ரோட்டில் சந்தேகப்படும் சூழ்நிலையில் ஒரு டிராக்டர் வந்தது. அதை தடுத்து நிறுத்தி பார்க்க அதன் என்ஜின் நெம்பர் TN 23 AQ 2866 என்றும் டிரெய்லர் நெம்பர் TN W 1317 என்றும் இருந்தது. அந்த டிராக்டரில் வண்டி ஒருவர் ஓட்டியும், அவர் அருகில் மற்றொருவரும் வந்தார்கள். அதில் ஒருவர் போலிசை கண்டதும் எத்தனித்து கொண்டு ஓடிவிட்டார். மேலும் டிராக்டர் ஓட்டி வந்தவரை விசாரிக்க தன் பெயர் தனபால் வயது 38, த/பெ.நாராயண மந்திரி வேலங்குப்பம் கிராமம் என்று கூறினார். மேலும் ஓடிய நபரை பற்றி விசாரிக்க அவர் உதயேந்திரம் நாயுடு தெருவை சேர்ந்த மூவேந்தன் என்று சொன்னார். மேலும் டிராக்டரை சோதனை செய்ய அதில் ஒரு யூனிட் ஆற்று மணல் இருந்தது. ஓட்டி வந்த நபரை விசாரிக்க அந்த மணலை திருட்டு தனமாக எந்தவித அனுமதியின்றி கடத்தி வந்ததாக சொன்னார். மேலும் அவரிடம் 14.30 மணிக்கு போலிசார் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமுலம் பெற்று எதிரியை கைது செய்து கைப்பற்றப்பட்ட ஆற்று மணலையும் டிராக்டரையும், டிரெய்லரையும் மகசரில் கைபற்றி நிலையம் வந்து நிலைய குற்ற 79/18 இ.த.ச.பிரிவு 379, 430 படி வழக்கு பதிவு ஏ1 தனபாலை மட்டும் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். மேலும் கைப்பற்றப்பட்ட மணலை தாலூக்கா அலுவலகத்தில் ஒப்புவித்து டிராக்டரை நீதிமன்றத்திற்கு ஒப்புவித்து சி.பி.எண் 20/2017 தேதி 06.03.17 அன்று இறுதியறிக்கை தாக்கல் செய்தேன். முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ3. வட்டாட்சியர் சான்றிதழ் அ.சா.ஆ4. படிவம் 95 அ.சா.ஆ5.

குறுக்கு விசாரணை : ஷு

எதிர் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.